**DEPOSITION OF WITNESS**
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***STC.No.488/20 21– P.W. 1***

| | |
|---|---|
| *Name* | அண்ணாதுரை |
| *Father/Husband's Name* | தியாகராஜன் |
| *Village* | பரவாக்கோட்டை |
| *Age* | *70* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 03.11.2025.*

***எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி***

1. நான் இந்நீதிமன்றத்தில் இதற்கு முன்னதாக சாட்சியம் அளித்த விவரங்கள் எனக்கு நினைவு உள்ளதா என்றால் உள்ளது. எனது முத்த மகன் சிங்கப்பூர் நாட்டிலும், 2 வது மகன் பரவாக்கோட்டை கிராமத்தில் உரக்கடை வைத்துள்ளார். கடந்த 2019-ம் வருடம் எனது இரண்டு மகன்களும் உரக்கடையிலும், சிங்கப்பூரிலும் இருந்தார்களா என்றால் ஞாபகமில்லை. பரவாக்கோட்டை தவிர வேறு கிராமங்களில் எனது 2 வது மகன் உரக்கடை வைத்தது இல்லை என்றால் சரிதான். ஆண்டிற்கு 2 1/2 லட்சத்திற்கு மேல் வருமானம் ஈட்டினால் 2019- ஆம் ஆண்டு காலக்கட்டங்களில் வருமான வரி செலுத்தவேண்டும் என்றால் சரிதான்.

2. 2019-ஆம் ஆண்டிற்கு 2 1/2 லட்சத்திற்கு மேல் வருமானம் ஈட்டாததால் நான் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. ஆண்டிற்கு விவசாய வருமானம் மட்டும் 2 இலட்சம் வரும். நாடிமுத்து என்பவர் எனது உறவினர் என்றால் சரிதான். அவர் இந்நீதிமன்றத்தில் எதிரி மீது ஒரு காசோலை வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு இருந்த விவரம் நான் நீதிமன்றத்திற்கு வந்தபோது தெரியும். நாடிமுத்து எனது சகோதரர் கண்ணன் என்பவருக்கு பங்காளி என்றாலும், எனக்கும் பங்காளி

என்றாலும் சரிதான். எனது சகோதரர் ரேவதியின் அக்கா கணவர் புதுக்கோட்டையை சேர்ந்த குணசேகரன் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவர் வெளியூரில் உள்ளார். எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. அவர் புதுக்கோட்டை நீதிமன்றத்தில் எதிரி மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இதே நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்தபோது 2019-ம் ஆண்டு காலக்கட்டங்களில் பரவாக்கோட்டை கிளை பாரத் ஸ்டேட் வங்கிக்கு என் மகன் பணம் அனுப்பி வைத்ததாகவும், அந்த பணத்தை சிறிது சிறிதாக எடுத்ததாக சாட்சியம் அளித்தள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் ஆட்சேபனை இல்லை என்று கூறி தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் வங்கி கணக்கில் புதுக்கோட்டை இருந்து 15.02.2019, 25.02.2019, 26.03.2019, 27.03.2019 ஆகிய தேதிகளில் பணம் டெபாசிட் ஆகியுள்ளது என்றால் சரிதான். வெளிநாட்டிலிருந்து பணம் வைப்பீடு வைக்கப்பட்டதாக எவ்வித குறிப்புகளும் இல்லை என்றால் சரியல்ல. எனது மகன் சாம்பாதித்து அனுப்பிய பணம் தான் அந்த வங்கி கணக்கில் உள்ளது. ஏஜெண்ட் மூலமாக அனுப்பினாரா என்று எனக்கு தெரியாது. மேற்கண்ட சங்கதிகள் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பவேண்டும் என்றால் வங்கி மூலமாகத்தான் அனுப்பவேண்டும் என்றாலும், ஏஜெண்ட் மூலமாக அனுப்புவது சரியல்ல என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 08.02.2019-ம் தேதி மகேந்திரா ஹவுசிங் லோன் 4,12,000/- பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் 4,12,000/- கடனாளியாக இருக்கும்போது, அதே ஆண்டில் எதிரிக்கு 10,00,000/- கடனாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 2019-ம் ஆண்டு காலக்கட்டத்தில் எதிரி எந்த முகவரியில், எந்த கதவு எண்ணில், எங்கு குடியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பைபாஸ்ரோடு, 6 வது குறுக்கு தெரு, கதவு எண்.3-ல் குடியிருந்து வந்தார். மேற்படி முகவரி எனது சகோதரர் கண்ணன் மனைவி ரேவதி சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல.

4. வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு முன்னதாகவே எதிரிக்கும், எனது சகோதரர் கண்ணன், அவரது மகன், அவரது மனைவி ரேவதி ஆகியோர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு வழக்கு

உள்ளது என்றால் சரிதான். எனது செல்போன் எண்.8675121959 ஆகும். செல்போன் சிம் ஏர்டெல் ஆகும். இவ்வழக்கின் காசோலை எங்கு வைத்து, யார் முன்னிலையில் கொடுக்கப்பட்டது என்பது குறித்து அறிவிப்பிலோ, புகாரிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தருணத்திலும், எதிரிக்க போன் செய்து பேசியது இல்லை என்றால் சரிதான். எதிரியின் தொலைபேசி எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அவரிடம் வாங்கியது இல்லை. எந்த தருணத்திலும் எதிரி என்னிடமிருந்து ரூ.10,00,000/- கடன் பெறவில்லை என்றால் சரியல்ல. . எந்த தருணத்திலும் எதிரி வழக்கு காசோலையை தனது வசம் பணமாக்க பெறவில்லை என்றும், மேற்படி காசோலையானது என் சகோதரர் கண்ணன் மனைவி ரேவதி என்பவரிடம் அத்தாட்சிக்காக எதிரியால் வழங்கப்பட்ட காசோலையை ரேவதி தங்களை வைத்து எதிரிக்கு எதிராக பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அதனால் தான் ஏற்கனவே 10,00,000/- தொகை என் மகன் என் வங்கி கணக்கில் வைப்பீடு செய்து வைத்திருந்ததாகவும், அதை எடுத்து எதிரிக்கு கொடுத்தாக சொல்லியுள்ள நிலையில் என் மகனால் கடந்த 2019-ம் ஆண்டு ரூ.10,00,000/- செலுத்தி வைக்கவில்லை என்றாலும் சரியல்ல. அதனால் தான் முன்னுக்கு பின்னாக எதிரிக்கு எதிராகவும், ரேவதிக்கு ஆதரவாகவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 06.11.2025
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.